**தலைப்பு 328 - மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 328 - மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 22 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 352.80 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 346.57 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 6.23 மில்லியன் அதாவது 1.77 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 312.30 | 310.14 | 2.16 | 0.69 |
| மூலதனம் | 40.50 | 36.43 | 4.07 | 10.05 |
| மொத்தம் | 352.80 | 346.57 | 6.23 | 1.77 |

**2.2 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18.00 | 11.04 | 9.00 | 11.71 | 50.00 | 40.16 |

**2.3 கணக்காய்வு அவதானிப்பு**

மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை |
| (இ) | ஆளணி சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 |
| (ஈ) | காசேடு/ சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 436 |
| (உ) | திணைக்கள ஒதுக்கீட்டுப் (அங்கீகரிக்கப்பட்ட செலவு) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 |

| | | |
|---|---|---|
| (ஊ) | பெறப்படும் காசோலை, காசுக் கட்டளை பதிவேடு | நிதப்பிரமாணம் 451 |
| (எ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஏ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (ஐ) | வாகன நிரப்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| (ஒ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (ஓ) | கொள்வனவுக் குழுச் கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) ஆம் வழிகாட்டி |

## 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.2.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கை 2016 யூன் 21 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் வருடாந்தம் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக வாகன மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.4 மற்றும் 3.5 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயலாற்றல்

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட பின்வரும் பிரதான பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான பணிகளில் 50 சதவீதத்தை விடக் குறைவாக நிறைவேற்றப்பட்ட பணிகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) தொழில்சார் உணவு வழங்கல் சேவைத் துறைக்கு நுழைவதற்கான திறன்சார் விருத்திக்கு உதவி வழங்கல்.

- ❖ உயர் இயலுமை மற்றும் மிகவும் சிறந்த கொடுப்பனவுடனான துறைகளில் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
- ❖ இளைஞர் சமூகத்தை கமத்தொழில் துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுவதற்காக இயந்திரமய, நவீனமய மற்றும் விளைத்திறனை உயர்வடையச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்து நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான தோட்ட அழகுபடுத்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல்.

(ii) குறுங்கால மற்றும் நீண்ட கால ரீதியில் ஊழிய நிரம்பல் மற்றும் கேள்விக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்காக ‘‘ஜாதிக மானவ சம்பத் பெதிகட’’ சஞ்சிகைக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் நிதிப்பிரமாணம் 264 இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளுக்காகவும் கொடுப்பனவைப் பெற்றவரிடமிருந்து உறுதிப்படுத்தலொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் 484 ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளத்திற்குரிய உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்படாமையால் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையைக் கைவிட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் வெளிநாடு சென்ற ஊழியர்களுக்காகவும் சம்பளம் செலுத்துவதில் ஆபத்தொன்று காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தால் மீளாய்வாண்டின்போது ரூபா 2,536,372 செலவில் அச்சிடப்பட்டு பெறப்பட்ட கையேடு, துண்டுப் பிரசுரம் மற்றும் சஞ்சிகைகளின் பெறுவனவு மற்றும் விநியோகத்தல் என்பன உரிய முறையில் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைமை அலுவலகத்திலிருந்து வெளியே கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களின் வருகை, வெளியேறுகை மற்றும் விடுமுறை தொடர்பாக திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட திணைக்களத்தின் மனிதவள உத்தியோகத்தர்களினாலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினாலும் மாதாந்தம் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய மாதத்திற்கு முன்னுள்ள மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 16 மாவட்ட செயலகங்களினதும் 181 பிரதேச செயலகங்களினதும் எதிர்கால நிகழ்ச்சித்திட்டம் 753 சந்தர்ப்பங்களில் தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 263 சந்தர்ப்பங்களுக்குரியவைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களில் நியமிக்கப்பட்ட திணைக்களத்தின் மனித வள உத்தியோகத்தர்களினதும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் மாதாந்த செயல்முன்னேற்றம் அடுத்துவரும் மாதத்தின் 5 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2015 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை 16 மாவட்ட செயலகங்களினதும் 181 பிரதேச செயலகங்களினதும் 537 மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கைகள் தாமதமாகக் கிடைத்திருந்ததுடன் 197 சந்தர்ப்பங்களுக்காக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 08 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 673 | 532 | 141 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 13 | 02 |
| | மொத்தம் | 703 | 553 | 150 |